Country Working Group for the formation of a
Provisional Transnational Government of Tamil Eelam - Swiss
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அமைப்பதற்கான
சுவிஸ் செயற்பாட்டுக்குழு

www.tgte-swiss.ch infoswiss@govtamileelam.org

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கு சுவிஸின் 10 பிரதிநிதிகளை மே 2 இல் தேர்ந்தெடுப்போம்!

**அன்புக்குரிய சுவிஸ் வாழ் தமிழீழ மக்களே!**

**2009 மே 17 - 19 காலப்பகுதியில் சிங்கள அரசினால் சிதைக்கப்பட்ட எங்கள் நடைமுறை தமிழீழ அரசின் தொடர்ச்சியாக, தமிழீழத் தனியரசினை வென்றெடுக்கும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்திட 2010 மே 17 – 19 காலப்பகுதியில் முதலாவது அரசவையைக் கூட்டி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை நிறுவிடுவோம் வாரீர்!**

கடந்த வருடம் மே 17-19 ஆம் திகதிகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் தமிழீழ தாயகத்தில் போராளிகள், பொதுமக்களின் உயரிய அர்ப்பணிப்புக்களுடன் கட்டப்பட்ட நடைமுறை தமிழீழ அரசும் அதன் கட்டமைப்புக்களும் மூர்க்கமான சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பினால் சிதைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தமிழர் தாயகம் எங்கும் இடம் பெயர்ந்த மக்களின் துயரவாழ்வு ஒருபுறமும், அடக்குமுறைக்குள் மக்களை வாழப் பழக்கும் நாகரீக காலத்திற்கு முறபட்ட முயற்சிகள் மறுபுறமும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச சட்டங்களுக்கு முரணாக கைதாகிய, சரணடைந்த போராளிகள் தடுப்புமுகாங்களிலும், சித்திரவதைக்கூடங்களிலும், இரகசியகூடங்களிலும், நாட்களை எண்ணியபடி வாழும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நீண்ட தமிழர்களின் உரிமைப்போரிற்கு வலுவும் வாய்ப்பும் ஏற்படுத்தித் தந்த இந்த நடைமுறை தமிழீழ அரசினை இல்லாதொழித்துவிட்டு தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக ஒடுக்கி அழிக்கும் சிங்கள பெருந்தேசிய நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல் எழுப்பக்கூடிய சனநாயகச் சூழல் தமிழர் தாயகத்தில் தற்போது நிலவவில்லை. சிறீலங்கா அரசும் அதன் படைகளும் நிகழ்த்தும் சனநாயக மறுப்பு நிர்வாகத்திற்குள் படிப்படியாக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதே நடைமுறைச் சாத்தியமாக உள்ளது.

ஆதலால், தமிழீழ மக்கள் தமது அரசியல் அபிலாசையான தமிழீழத் தனியரசினை வென்றெடுப்பதற்கான அரசியல் முன்னெடுப்புக்களை இலங்கைத்தீவுக்கு வெளியேதான் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில் 2009 யூன் மாதம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்கின்ற புதுமையான எண்ணக்கரு நாடு கடந்த அரசியல் வெளியில் வாழும் தமிழீழ மக்களுக்கான அரசியல் நடவடிக்கைத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை மக்களால், இதற்கென நேரடியாக நடாத்தப்படும் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்டு அமைத்திட ஒரு சுயாதீனமான செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

இச் செயற்குழுவின் இணைப்பாளாராக விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக்குழு உறுப்பினரும், சட்ட ஆலோசகரும், இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபை வரைவினை தயாரித்த மதியுரைஞர் குழுவின் பொறுப்பாளருமான திரு விசுவநாதன் ருத்திரகுமாரன் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரது வழிகாட்டலில் மதியுரைஞர் குழு அமைக்கப்பட்டு நாடு கடந்த அரசாங்கம் தொடர்பான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக மதியுரைக்குழுவின் ஆய்வின் அடிப்படையில் அமைந்த இறுதி அறிக்கை மக்கள் கருத்துப்பரிமாற்றத்தின் பின் வெளியிடப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் அடிப்படையிலேயே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

சர்வதேச அளவில் பரந்துவாழும் தமிழ் மக்களிடையேயிருந்து 135 தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைப் பிரதிநிதிகளாக இருப்பர். இவர்களில் 115 பேர் முதற் கட்டமாக நடாத்தப்படும் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். தமிழீழ அரசாங்கத்தின் அரசவைப் பிரதிநிதிகளாக சுவிஸ் நாட்டில் இருந்து 10 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஏனைய நாடுகளில் நடைபெறுவதனைப் போல எதிர்வரும் மே 02ம் நாள் அன்று சுவிஸிலும் இடம்பெறுகிறது.

சுவிஸில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பான முழுமையான விபரங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன. நாடு கடந்த அரசாங்கத்தினை அமைப்பதற்கான சுவிஸ் செயற்பாட்டுக் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய முழுமையான விபரங்களையும் மதியுரைக்குழுவின் அறிக்கைகளையும் பின்வரும் இணையத் தள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். இணையத்தள முகவரி: www.tgte-swiss.ch

நன்றி.

**சுவிஸ் செயற்பாட்டுக்குழு**
**தொடர்களுக்கு: மின்னஞ்சல்: infoswiss@govtamileelam.org, தொலைபேசி: 022 734 00 63**